12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

100. 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றங்கள் (மருத்துவ கவனிப்பு மற்றும் சிகிச்சை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பொதுத் துறையின் 28—8—1989 ஆம் நாளிட்ட 1431 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (மொத்த விற்பனைக்கு வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 31—3—1989 ஆம் நாளிட்ட 454 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

102. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

182. தமிழ்நாடு மின் வாரியத்தின் 1988-89, 1989-90 மற்றும் 1990-91 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளைக் குறித்துத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

183. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (பத்தாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

184. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (பதினொன்றாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

185. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (பன்னிரெண்டாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).